# 5. யேசுவின் வெற்றிப் பாதை



| | |
|---|---|
| வெரோணிக்கா | சிலுவை சுமந்து கொண்டு போகிறவர் யார் ? |
| சீமோன் | யேசு |
| வெரோணிக்கா | சிலுவை சுமக்கும் அளவிற்கு அவர் என்ன குற்றம் செய்தார் ? |
| சீமோன் | ஒரு குற்றமும் செய்யவில்லை. |
| வெரோணிக்கா | அப்படியானால் ஏன் யேசுவை இவ்வளவு துன்பப்படுத்துகிறார்கள். |




யேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரை வேதனைக்குள்ளாக்கினார்கள். ஆனால் யேசு அவர்களை மன்னித்தார். நாமும் நம்மைத் துன்புறுத்துபவர்களுக்கு மன்னிப்புக் கொடுப்போம்.



இறை தந்தையை மகிழ்வித்ததனால் யேசு வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற யேசு இன்று எம்மோடு இருக்கிறார். நாம் யேசுவை அன்பு செய்வோம்.